**கவனிக்க.**-2019.03.29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2118 - 2019 අප්‍රේල් මස 05 වැනි සිකුරාදා - 2019.04.05

2118 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 864 |


**கவனிக்க.**- (i) அரச காணி (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் 2019, மாச்சு மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) மோட்டார் வாகனம் (திருத்தம்) சட்டமூலம் 2019, மாச்சு மாதம் 29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2019, ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

861-B 81510-5,403 (2019/04)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான “புதிய சேர்வாளர்கள்” ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலூவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலூவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லூப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலூம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லூமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லூமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லூத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லூத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லூவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லூ விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலூல் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறிப் பயிற்சிக்காக விஞ்ஞானவியல் தாதி பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளல் - 2018 /2019

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் தாதியர் சேவையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கற்கை நெறிக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய பல்கலைக்கழகத்தினூடாக விஞ்ஞானவியல் தாதியர் பட்டம் பெற்ற கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரிகளினது பட்டம் வலுப்பெற்ற தினம் மற்றும் GPA பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட திறமைப் பட்டியலின் பிரகாரம் மற்றும் நிலவுகின்ற வெற்றிடங்களின் பிரகாரம் ஆண்டு தோறும் பயிற்சி பெறுவதற்கு தேவைப்படும் எண்ணிக்கையில் 25% இனை விஞ்ஞானவியல் தாதியர் பட்டதாரிகளை விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளில் இருந்து தெரிவுசெய்யப்படுவர்.

2. **பதவிக்கான கல்வித் தகைமைகள்.-** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய பல்கலைக்கழகத்தினூடாக விஞ்ஞானவியல் தாதியர் பட்டத்தை (Bsc. Nursing) பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **உடற்தகைமை மற்றும் ஏனைய தகைமைகள் :**

(அ) இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவை செய்வதற்கு எல்லாவிதத்திலும் உடல் ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) பதவிக்குரிய கடமைகளைச் செய்வதற்குப் போதியளவு உடல் ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் ;

(இ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஈ) விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும் ;

(உ) ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும் ;

(ஊ) 2019.04.30 ஆந் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;

(எ) பட்டம் வலுப்பெற்ற தினம் 2019.04.30 ஆந் திகதிக்கு முற்பட்ட திகதியாக இருத்தல் வேண்டும்.

4. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பங்களைத் தயாரித்தல் வேண்டும். அதற்காக A4 அளவுத் தாளினைப் பயன்படுத்தல் வேண்டும். விண்ணப்பத்தில் இலக்கம் 1 தொடக்கம் 12 வரை முதல் பக்கத்திலும், 13 தொடக்கம் 15 வரை இரண்டாம் பக்கத்திலும், 16 ஐ மூன்றாம் பக்கத்திலும் அமையும் வண்ணம் தயாரித்தல் வேண்டும்;

(ஆ) விண்ணப்பதாரிகள் 300.00 ரூபா தொகையை "இலங்கை வங்கி, தப்ரபேன் கிளை, இல. 7041318, சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம்-பரீட்சைக் கட்டணம் அறவிடல்" எனும் கணக்கிற்கு வரவு வைத்து பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டினுள் கழறாதவாறு ஒட்ட வேண்டும். அக்கட்டணம் எக்காரணங் கொண்டும் மீண்டும் திருப்பித்தரப்பட மாட்டாது என்பதுடன், பிற பரீட்சைகளுக்காக மாற்றம் செய்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது ;

(இ) இலங்கை நிர்வாக சேவையின் உத்தியோகத்தர் ஒருவர்/கல்வி நிர்வாக சேவையின் உத்தியோகத்தர் ஒருவர்/அரசாங்க கணக்காளர் சேவையின் உத்தியோகத்தர் ஒருவர்/ அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/ சட்ட வழக்கறிஞர்/பிரசித்த நொத்தாரிசு/வருட சம்பளம் 2,40,360 ரூபாவிற்குக் குறையாத வேதனம் பெறும் ஓய்வூதிய சம்பளத்துடன் கூடிய அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் ;

(ஈ) முறையாகப் பூர்த்திசெய்த விண்ணப்பத்தைக் கடித உறையில் இட்டு அக்கடித உறையின் இடதுபக்க மேல் மூளையில் "தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கை நெறிப்பயிற்சிக்காக விஞ்ஞானவியல் தாதி பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளல் - 2018/ 2019" எனவும், உரிய பட்டம் மற்றும் கல்வி ஆண்டு என்பவற்றையும் குறிப்பிட்டு, "பணிப்பாளர், நிர்வாகம் 01, சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு, "சுவசிறிபாய", இல. 385,

வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்கு 2019.04.30 ஆந் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

**குறிப்பு**.- மேற்படி (2) மற்றும் (3) இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் ஏனைய சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியான 2019.04.30 ஆந் திகதிக்கு சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5. அரசாங்க அல்லது அரசாங்க சார்பான நிறுவனங்களில் சேவை செய்பவர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்ப வேண்டும். அத்துடன் இது வெளிவாரியான ஆட்சேர்ப்பு என்பதுடன், உரிய பயிற்சியைச் சிறப்பாக நிறைவு செய்தால் அல்லது செய்யாதவிடத்து, எக்காரணத்தைக் கொண்டும் தற்போது வகிக்கும் பதவிக்கு மீண்டும் செல்ல முடியாது.

6. இப்பொதுச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு அமையாத, பூரணப்படுத்தப்படாத மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் அமையாத விண்ணப்பங்கள், வங்கிப் பற்றுச்சீட்டு ஒட்டப்படாத மற்றும் 2019.04.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவு செய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும் என்பதுடன், விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்பட மாட்டாது.

7. மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுள் பட்டம் வலுப்பெற்ற தினம் மற்றும் GPA பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட திறமைப் பட்டியலின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்டவர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையொன்றினால் பொதுவான நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படுவதுடன், நேர்முகப் பரீட்சை சபையினால் தாதியர் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பரிசீலித்தல் மற்றும் உடற்தகைமை என்பன பரிசீலிக்கப்படும்.

**குறிப்பு** :

(அ) சேவை அவசியத்தின் பிரகாரம் பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளும் தொகை மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுபவர்களின் தொகை என்பன சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

(ஆ) நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கும் சகலரையும் பயிற்சிக்கு இணைத்துக்கொள்வதற்காக இச்சுற்ற றிக்கையில் எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை என்பதை கவனத்திற்கொள்ளவும்.

(இ) நேர்முகப் பரீட்சையின் பின்னர் தகைமையுடையோர், தகைமையற்றோர் மற்றும் தெரிவுசெய்யப்பட்டவர்கள் பற்றிய விபரங்கள் www.health.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடப்படுவதுடன், எவருக்கும் தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்பட மாட்டாது.

8. நேர்முகப் பரீட்சையின்போது விண்ணப்பதாரிகளால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப்பிரதிகள் மற்றும் தம்மால் சான்றுறுதி செய்யப்பட்ட பிரதிகள் என்பவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் :

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) பட்டத்தின் மூலப்பிரதி மற்றும் GPA பெறுமதியைக் காட்டும் சான்றிதழ் (இச்சான்றிதழ்களின் உறுதிப்படுத்திய பிரதிகளை விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டும்.) ;

(இ) தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது செல்லுபடி யாகும் கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரம்.

9. **பயிற்சி வழங்கும் முறை** :

| பயிற்சிநெறி | அக்கற்கைநெறிக்கான கால எல்லை | மொழி |
|---|---|---|
| தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு | 6 மாதங்கள் | ஆங்கிலம் |

(அ) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் உரிய தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறிக்கு அந்தந்த பயிற்சிப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்படுவர். கற்கை நெறிகள் ஆங்கில மொழியில் இடம்பெறும்.

(ஆ) பயிற்சிப் பாடசாலைகளுக்கு உள்வாங்கப்படுகின்ற பயிலுனர்கள் பயிற்சிப் பாடசாலைகளில் வலுவில் இருக்கும் விதிமுறைகளுக்குக் கட்டுப்படல் வேண்டும். அவ்விதிமுறைகள் மற்றும் அரசினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் ஏனைய விதிமுறைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

(இ) பயிற்சிக் காலத்தின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்திபெறத் தவறும் அல்லது அவர்களின் வேலையும் நடத்தையும் திருப்திகரமாக இல்லாவிட்டால் அல்லது தான் உள்வாங்கப்படும் பயிற்சிப் பாடசாலைகளில் வலுவில் இருக்கும் விதிமுறைகளுக்குக் கட்டுப்படத் தவறும் பயிலுநர்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவ்வித நட்டஈடுகளும் இன்றி பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர்.

(ஈ) பயிற்சிக் காலத்தில் அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 03/2016 இன் நியதிகளுக்கு அமைய மாணவ தாதியர்களுக்கு இரண்டாம் வருடத்தில் வழங்கப்படுகின்ற மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படும்.

(உ) தாதியர் பயிற்சிப் பாடசாலைக்கு பயிற்சிக்காக உள்வாங்கப்படும்போது பயிற்சியைச் சிறப்பாக நிறைவுசெய்வதாகவும், அப்பயிற்சியை இடைநடுவில் கைவிடுவதில்லை எனவும், அந்தப் பயிற்சியை முழுமையாக நிறைவுசெய்த பின்னர் உரிய பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டால் குறைந்தபட்சம் ஐந்து வருடங்கள் (5) மாகாணத்தில் அல்லது மத்திய அரசின் கீழுள்ள வைத்தியசாலைகள் அல்லது சுகாதார சேவைகள் திணைக்களத்தில் சேவையாற்றுவதாகவும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் ஒப்பந்தத்திற்கும், பிணைக்கும் உடன்படல் வேண்டும். பயிற்சியின்போது பயிற்சியிலிருந்து விலகினால் அல்லது பயிற்சியை இடைநடுவில் கைவிட்டால், மேற்படி (இ) பந்தியின் பிரகாரம் பயிற்சியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது நியமனம் பெற்று ஐந்து (5) வருடங்கள் சுகாதார சேவைகள் திணைக்களத்தின்கீழ் உரிய பதவியில் சேவையாற்றத் தவறினால் அல்லது பயிற்சிக் காலத்தில் அவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் பயிற்சிக்காக செலவிடப்பட்ட செலவுகள் மற்றும் பிணை அவரினால் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யத்தவறின், அந்தப் பணத்தை அறவிடுவதற்கு ஒப்பந்தத்தின் பிரகாரம் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

10. **சேவையில் ஈடுபடும் நியதிகள்**.- பயிற்சியின் இறுதியில் குறித்த பதவியில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு/வழங்காமல் இருப்பதற்குத் தீர்மானித்தலானது அச்சந்தர்ப்பத்தில் நிலவும் வெற்றிடங்களுக்கேற்ப ஆகும். அதன் பிரகாரம் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு தீர்மானித்தால் பயிலுநர்கள் தாம் பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட கற்கைநெறிக்கு உரித்தான ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் மற்றும் வெற்றிடங்களின் பிரகாரம் 2017.11.30 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2016 இன் அட்டவணை I இன் MT-7-2016 சம்பளப் படிமுறைக்கு உரித்தான III ஆம் தரத்தின் பதவி நிலை தாதியர் பதவிகளுக்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பதவிக்கு நியமிக்கப்பட்டால் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2016 இன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

11. விண்ணப்பத்தை நிரப்பும்போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் மற்றும் விபரங்களை மிகவும் கவனமாகவும் பிழையின்றியும் உள்ளடக்கவும். பயிற்சிக்காக இணைத்துக்கொள்ளும் போதும் நியமனம் பெற்ற பின்பும் மேற்படி சான்றிதழ்கள் பொய்யானவை என நிரூபணமாகினால், சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிப்பதற்கும், வழங்கப்பட்ட நியமனம் இரத்துச் செய்யப்பட்டு பயிற்சியிலிருந்து/பதவியிலிருந்து நீக்கப்படுவதோடு அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதுடன், மீண்டும் அரசாங்க சேவையில் இணைய முடியாதவாறு கறுப்புப்பட்டியலில் அவருடைய பெயர் சேர்க்கப்படுவதுடன், பயிற்சிக் காலத்தில் இவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிடப்பட்ட செலவினங்கள் மற்றும் ஒப்பந்தப் பணம் அவரிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

12. தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் உரிய கற்கை நெறியைத் தொடர்வதற்கு மற்றும் நாட்டின் எப்பாகத்திலும் சேவை புரிவதற்கு உடல் மற்றும் உள ரீதியாக ஆரோக்கியமானவர் என்பதை உறுதிப்படுத்துவதற்கு பயிற்சியின் முதலாம் மாதத் தினுள் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன், மருத்துவப் பரிசோதனையில் ஆரோக்கிய மற்றவர் எனக் காணப்பட்டால் விண்ணப்பதாரி பயிற்சியில் ஈடுபடுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவர்.

13. இப்பயிற்சிக் காலத்தினுள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அல்லது தனியார் சேவையில் ஈடுபடுதல் தொடர்பாக உரிமைகள் ஏதும் இல்லை. அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகத் தெரியவரின் பயிற்சியில் இருந்து நீக்கப்படும் அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

14. மேற்படி இணைத்துக்கொள்ளப்படும் சகல உத்தியோகத்தர்களுக்கும் உரித்தாகும் சகல நியதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை விதிமுறைகள், சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் விதிக்கப்படும் கொள்கைத் தீர்மானங்கள், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அரசாங்க சேவைகள் தொடர்பாக விதிக்கப்படும் விதிமுறைகள் மற்றும் சட்டதிட்டங்களுக்கும், தாதியர் சேவை பிரமாணக் குறிப்பின் நியதிகளுக்கும், அரசாங்க நிதிப்

பிரமாணத்திற்கும், அரசினால் விதிக்கப்படும் ஏனைய விதிமுறைகள், சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் மற்றும் அவற்றில் காலத்திற்குக்காலம் ஏற்படுத்தக்கூடிய திருத்தங்கள் என்பவற்றுக்குக் கட்டுப்படல் வேண்டும்.

15. பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளப்படுபவர்களுக்கு பயிற்சிப் பாடசாலைகளில் தங்குமிட வசதிகள் வழங்குவதற்கு இவ்வமைச்சு கட்டுப்படவில்லை. அவ்வாறு வழங்குவதாயின், அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட வீடு அல்லது அறை வாடகை, தண்ணீர் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் அறவிடப்படும்.

16. பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளல் தொடர்பாக இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் உள்வாங்கப்பட்ட அல்லது உள்வாங்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பாக சிக்கல்கள் தோன்றினால் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் முரண்பாடுகள் ஏற்படுமிடத்து, சிங்கள மொழியே வலுவில் இருக்கும்.

செயலாளர்,
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
'சுவசிறிபாய', இல. 385,
வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறிப் பயிற்சிக்காக விஞ்ஞானவியல் தாதி பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளல் - 2018/2019**

(விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்யமுன் பொது சுற்றறிக்கையை நன்கு வாசிக்கவும்.)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(ஆ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

(இ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

3. அஞ்சல் முகவரி :----.

4. நிரந்தர முகவரி :----.

5. தொலைபேசி இலக்கம் :----.

6. (அ) வதிவிட மாவட்டம் :----.

(ஆ) நீங்கள் இம்மாவட்டத்தின் நிரந்தர வசிப்பாளரா ? :----.

7. (அ) பிறந்த திகதி :
ஆண்டு : ---- மாதம் : ---- திகதி : ----

(ஆ) 2019.04.30 ஆந் திகதியன்று வயது :
வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----

8. பால் :
ஆண் ☐ பெண் ☐ (உரிய கூட்டில் X அடையாளம் இடவும்)

9. நீங்கள் இலங்கைப் பிரசையா ?
ஆம் ☐ இல்லை ☐ (உரிய கூட்டில் X அடையாளம் இடவும்)

10. திருமணமானவரா ?

ஆம் ☐ இல்லை ☐
(உரிய கூட்டில் X அடையாளம் இடவும்)

11. உயரம் :
அடி : .......................... அங்குலம் : ............................

12. கல்வித் தகைமை :

| சித்தியடைந்த பட்டம் | சித்தி | தரத்தின் பொது பெறுமதி (GPA) | பல்கலைக்கழகம் | கல்வி ஆண்டு |
|---|---|---|---|---|
| | | | | |

13. ஏதாவது குற்றச் செயலுக்காக நீதிமன்றத் தண்டனை அனுபவித்துள்ளீரா ?

ஆம் ☐ இல்லை ☐
(உரிய கூட்டில் X அடையாளம் இடவும்)

ஆமெனில், தயவுசெய்து காரணத்தைக் குறிப்பிடுக :----.

14. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

நான் இவ்வறிவித்தலை நன்கு வாசித்து விளங்கிக் கொண்டு அதில் குறிப்பிடப்பட்டுள்ள சகல நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு இவ்விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்தேன் எனவும், நான் வேறு எந்தக் கற்கைநெறிகளையும் தொடரவில்லை எனவும், இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகல விபரங்களும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் உறுதியுரைக்கின்றேன்.

எனது இந்த உறுதியுரையில் அல்லது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது பிழை அல்லது தவறு என நிரூபனமாகினால், பயிற்சியின்போது எனின், நான் பயிற்சிக்குத் தகுதியற்றவர் எனவும், நியமனம் கிடைத்த பின்னர் எனின், பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

அவ்வாறே இவ்வாட்சேர்ப்பு வெளிவாரியான ஆட்சேர்ப்பு எனவும், உரிய பயிற்சியைச் சிறப்பாக நிறைவுசெய்தால் அல்லது செய்யாதவிடத்து எக்காரணத்தைக் கொண்டும் தற்போது வகிக்கும் பதவிக்கு மீண்டும் செல்ல முடியாது என்பதையும் நான் நன்கறிவேன்.

(பற்றுச்சீட்டைக் கழறாத விதத்தில்
இங்கு ஒட்டவும்.)

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

15. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................ அவர்கள் எனக்கு தனிப்பட்ட முறையில் பரீட்சயமானவர் என்றும் அவரது கையொப்பத்தை எனது முன்னிலையில் ............................. ஆந் திகதி இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
(பதவி முத்திரையுடன்).

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

16. விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் உள்ளவராயின் திணைக்களத் தலைவரின் சான்றுரை:

மேற்படி விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி .................................................. என்பவர் இத்திணைக்களத்தில் ........ ................................ பதவி வகிக்கின்றார் என உறுதிப்படுத்துகின்றேன்.

விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என உறுதிப்படுத்துவதுடன், இவர் இப்பதவிக்காகத் தெரிவுசெய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும்/முடியாது என அறியத்தருகின்றேன்.

அத்துடன் இது வெளிவாரியான ஆட்சேர்ப்பு எனவும், உரிய பயிற்சியைச் சிறப்பாக நிறைவுசெய்தால் அல்லது செய்யாத விடத்து எக்காரணத்தைக் கொண்டும் தற்போது வகிக்கும் பதவிக்கு மீண்டும் செல்ல முடியாது என்பது தெளிவுபடுத்தப் பட்டது எனவும் அறியத்தருகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரையுடன்).

திணைக்களத் தலைவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

3-210

---

## சட்டவரைஞர் திணைக்களத்தில் தரம் III ஆவணப்படுத்துகை உதவியாளர்களுக்கும் பதிப்பாசிரியர்களுக்குமான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை –2019

சட்டவரைஞர் திணைக்களத்தின் பதிப்பாசிரியர்களையும் ஆவணப்படுத்துகை உதவியாளர்களையும் ஆட்சேர்ப்பதற்கான இயைபான அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, பதிப்பாசிரியர்களுக்கும் ஆவணப்படுத்துகை உதவியாளர்களுக்குமான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை, 2019, யூலை மாதத்தில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. (i) இப்பரீட்சையானது, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியினால் நடாத்தப்படுமென்பதுடன், பரீட்சையை நடாத்துதலும் பெறுபேறுகளை வெளியிடுதலும் தொடர்பாக அவரினால் விதிக்கப்பட்ட விதிகளுக்குப் பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். பரீட்சையை நடாத்துதலும் பெறுபேறுகளை வெளியிடுதலும் தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியின் முடிவு இறுதியானதாதல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்காக விதிக்கப்பட்ட விதிகள் வர்த்தமானி அறிவித்தலில் வேறாக அச்சிடப்பட்டுள்ளன. எவரேனும் பரீட்சார்த்தியினால் இவ்விதிகள் மீறப்படின், அவர் பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

3. **பரீட்சைக் கட்டணம்**: பரீட்சைக்காக விதித்துரைக்கப்பட்ட பாடங்களுக்குப் பரீட்சார்த்திகள் ஒருதடவையில் அல்லது தனித்தனியாகத் தோற்றமுடியும். ஒன்றில் முழுப்பரீட்சைக்கும் அல்லது ஏதேனும் தனியொரு பாடத்துக்கு மட்டுமே முதற்றடவையாகப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்குக் கட்டணங்கள் எவையும் விதிக்கப்படமாட்டாது. பரீட்சார்த்தி அடுத்துப்பின்னரான ஏதேனும் தடவையில் இப்பரீட்சைக்குத் தோற்றுமிடத்து, தனியொரு பாடத்துக்காக 250 ரூபாவான பரீட்சைக் கட்டணமும் முழுப்பரீட்சைக்கும் 500 ரூபாவும் விதிக்கப்படும். பரீட்சைக் கட்டணங்கள், பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியின் 2013-02-13 என்ற வருமானத் தலைப்பின் வரவுக்கு இலங்கையிலுள்ள ஏதேனும் அஞ்சலகத்தில் அல்லது உப அஞ்சலகத்தில் அல்லது ஏதேனும் மாவட்ட/பிரதேச செயலகத்தில் செலுத்தப்படலாம் என்பதுடன், வழங்கப்பட்ட பற்றுச்சீட்டானது விண்ணப்பப்படிவத்தில் தோதான இடத்தில் ஒட்டப்படுதலும் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றைப் பரீட்சார்த்தி தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகவிருக்கலாம்). செலுத்தப்பட்ட கட்டணங்கள் எச்சூழ் நிலைகளிலும் மீளளிக்கப்படமாட்டாது அல்லது வேறேதேனும் பரீட்சைக்காகக் கைமாற்றப்படமாட்டாது.

4. ***விண்ணப்பிக்கும் முறை.-*** விண்ணப்பமானது இதனோடிணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கிணங்கத் தயாரிக்கப்படுதல் வேண்டும். A4 அளவுத் தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பமானது தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், 01 முதல் 05 வரையான தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலிருத்தலும் வேண்டும். மீதிப்பாகம் தாளின் இரண்டாவது பக்கத்துக்குக் கொண்டுசெல்லப்படுதல் வேண்டும். சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களில், பரீட்சையின் பெயர் சிங்களத்துடன் சேர்த்து மேலதிகமாக ஆங்கிலத்திலும் விண்ணப்பத்தின் தலையங்கத்தில் காணப்படுதல் வேண்டும். அதேபோன்று, தமிழ் மொழியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களிலும் பரீட்சையின் பெயர் விண்ணப்பத்தின் தலையங்கத்தில் ஆங்கிலத்திலும் காணப்படுதலும் வேண்டும். விண்ணப்பப்படிவம் தட்டச்சிடப்படலாம் ஆனால் அது விண்ணப்பதாரரின் கையெழுத்தில் சரியாகவும் வாசிக்கக்கூடியதாகவும் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரரினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் 2019.05.03 ஆந் திகதிய அல்லது அதற்குமுன்னர் "கொழும்பு, த.பெ.இல. 1503, பரீட்சைகள் திணைக்களம், ஒழுங்கமைப்புகள் தாபனம் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, பரீட்சைகள் ஆணையாளர்" தலைமையதிபதியை வந்தடையும் வகையில் பதிவஞ்சல்மூலம் திணைக்களத் தலைவரினூடாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும்போது, பரீட்சையின் பெயர், கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்படுதல் வேண்டும். பூர்த்தியற்ற விண்ணப்பங்களும் முடிவுறும் திகதிக்குப் பின்னர் பெறப்பட்ட விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. நிரப்பப்பட்ட விண்ணப்பமானது மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய வேண்டுமென விண்ணப்பதாரர் உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் இசைந்தொழுகாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். (நிரப்பப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதியொன்றை விண்ணப்பதாரர் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகவிருக்கும்).

5. ***விண்ணப்பதாரரின் ஆளடையாளம்.-*** ஒவ்வொரு விண்ணப்பதாரரும் எந்தப் பாடம் தொடர்பில் பரீட்சை மண்டபத்தில் தோற்றுகின்றாரோ அந்தப் பாடம் தொடர்பில், அவரது ஆளடையாளத்தைப் பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரினது திருப்திக்கு எண்பித்தல் வேண்டும். அத்தகைய நோக்கத்துக்காகப் பின்வரும் ஆவணங்களுள் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும்:-

(i) தேசிய ஆள்அடையாள அட்டை;

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டொன்று;

(iii) செல்லுபடியான சாரதி உத்தரவுப் பத்திரம்.

மேற்கூறப்பட்ட ஆவணங்களுள் ஒன்றைச் சமர்ப்பிப்பதற்கு இயலாதவர்களாகவுள்ள பரீட்சார்த்திகளின் பரீட்சார்த்தத்தன்மை தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியின் முடிவு இறுதியானதாகும்.

6. வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தகைமைகளையுடையவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளார்களென்ற ஊகத்தின்மீது பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதி, மேற்கூறப்பட்டவாறு தமது விண்ணப்பங்களை அவருக்கு ஆற்றுப்படுத்தியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேரசூசியின் பிரதிகளுடன் சேர்த்து அனுமதி அட்டைகளை வழங்குவார். அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட்டதனை உடனடுத்து இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் அப்பயன்பட்ட அறிவித்தலொன்றைச் செய்தித்தாள்களில் அதன் இணையத்தளத்திலிருந்து வெளியிடும். சொல்லப்பட்ட அறிவித்தல் வெளியிடப்பட்டதிலிருந்து 2 அல்லது 3 நாட்களுக்குப் பின்னர் அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளாத எவரேனும் விண்ணப்பதாரர்கள் இருப்பின், அத்தகைய விண்ணப்பதாரிகள் அவ்வறிவித்தலில் கொடுக்கப்பட்ட தொலைபேசி இலக்கங்களினூடாகப் பரீட்சைகள் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளுதல் வேண்டும். அவ்வாறு செய்யும் போது விண்ணப்பதாரர், அவரது முழுப்பெயரையும், முகவரியையும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும், பரீட்சையின் பெயரையும் குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன், விண்ணப்பதாரர் அத்தகைய விசாரிப்பைச் செய்யும் போது, விண்ணப்பதாரர் தம்வசம் வைத்திருந்த விண்ணப்பத்தின் பிரதியொன்றையும், கட்டணங்களைச் செலுத்தும்போது பெறப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதியையும், பதிவுசெய்யப்பட்ட கடிதத்தின் பற்றுச்சீட்டின் பிரதியொன்றையும் தயாராக வைத்திருத்தலும் வேண்டும்.

விண்ணப்பதாரர் கொழும்புக்கு வெளியே வதிபவராகவிருப்பின், தொலைநகலினூடாக அனுமதி அட்டையின் பிரதியொன்றை அவர் பெறுவதனை இயலச்செய்யும் வகையில் மேலே கொடுக்கப்பட்ட விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தையும் வேறு தகவல்களையும் குறிப்பிட்டு, தொலைநகலினூடாகப் பரீட்சைகள் திணைக்களத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்டவொரு கோரிக்கைக் கடிதத்தினூடாக விசாரிப்புகளைச் செய்வது பயனுள்ளதாகவிருக்கும்.

7. விண்ணப்பத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் திணைக்களத் தலைவரினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரரொருவர், அவருக்கு கொடுக்கப்பட்ட சுட்டெண்ணின்கீழ் அவருக்கு விதித்துரைக்கப்பட்ட மண்டபத்திலும் பரீட்சைத் திகதியன்றும் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அவரது கையொப்பம் எந்த அனுமதி அட்டையில் அத்தாட்சிப்படுத்தப்படுகின்றதோ அந்த அனுமதி அட்டை பரீட்சையின் மேற்பார்வையாளருக்குக் கையளிக்கப்படுதல்

வேண்டும். அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற விண்ணப்பதாரரொருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

8. விண்ணப்பதாரரினால் வகிக்கப்பட்ட பதவியும் விண்ணப்பத்தைச் செய்த நேரத்தில் அவரது வேலைத்தளமும் பரீட்சை தொடர்பான எல்லா விடயங்களுக்கும் இயைபாகவுள்ளதுடன், விண்ணப்பத்தை அனுப்பிய பின்னர் அது தொடர்பில் ஏற்படுகின்ற எவையேனும் மாற்றங்கள் கவனத்திற்கொள்ளப்படவும் மாட்டாது.

9. பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பதாரர்களை இயலச்செய்து பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட அனுமதி அட்டைகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்களுக்கான கடமை விடுமுறையை திணைக்களத் தலைவர் அங்கீகரித்தல் வேண்டும். பயணச்செலவுகள் எவையும் செலுத்தப்படமாட்டாது.

10. இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம் மட்டுமே நடாத்தப்படும். விண்ணப்பதாரர் போட்டிப் பரீட்சையினூடாகப் பகிரங்க சேவையைச் சேர்ந்திருப்பின், அவர் எந்த மொழிமூலம் சொல்லப்பட்ட போட்டிப்பரீட்சைக்குத் தோற்றினாரோ அந்த மொழிமூலத்தினூடாக அவர் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டுமென்பதுடன், ஒரு போட்டிப்பரீட்சைக்கும் தோற்றாமல் பகிரங்க சேவையைச் சேர்ந்துள்ள எவரேனும் விண்ணப்பதாரர், அவர் எந்தப் பரீட்சையினூடாகப் பகிரங்க சேவையினுள் பிரவேசிப்பதற்குத் தகைமைபெற்றாரோ அந்தப் பரீட்சைக்கு அவர் தோற்றிய மொழிமூலத்தினூடாக இப்பரீட்சைக்குத் தோற்றுதலும் வேண்டும். விண்ணப்பதாரர் ஒரே மொழியில் பரீட்சையின் எல்லாப் பாடங்களுக்கும் தோற்றுதல் வேண்டும். விண்ணப்பதாரரொருவர், தமது விண்ணப்பத்திற் குறிப்பிடப்பட்ட மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

11. இப்பரீட்சை கொழும்பில் மட்டுமே நடாத்தப்படும்.

12. **பரீட்சை நடவடிக்கைமுறை**: மேலேயுள்ள பதவிகளுக்கு இயைபான பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டுள்ளது.

| வினாத்தாள் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடையும் புள்ளிகள் |
|---|---|---|---|
| (1) தாபன மற்றும் நடவடிக்கைமுறைக் கோவை | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| (2) நிதி ஒழுங்குவிதிகளிலான அடிப்படை அறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40 |

**பாடவிதானம்**:-

| பரீட்சையின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| 1. தாபன மற்றும் நடவடிக்கைமுறைக் கோவை. | 1. தாபனக்கோவையின் 1 ஆம் தொகுதியின் அத்தியாயங்கள் VII, VIII, XII, XIV,XXIV.<br>2. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கை முறைசார் விதிகள் |
| 2. நிதி ஒழுங்குவிதிகளிலானஅடிப்படை அறிவு. | நிதி ஒழுங்குவிதிகளின் அத்தியாயங்கள் IV,V,VI,IX. |

**குறிப்பு**.-

* விண்ணப்பதாரர் மேலேயுள்ள பாடங்களுக்குத் தனித்தனியாகத் தோற்றமுடியும்.

* விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் மேலேயுள்ள பரீட்சையில் சித்தியடைவதற்குத் தவறியமை சம்பள உயர்வின் பிற்போடுகையை விளைவிக்கும்.

13. விண்ணப்பதாரரொருவருக்கு ஓர் அனுமதி அட்டையின் வழங்குகை, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகவுடையவராகவிருப்பதற்கான தகைமைகளை நிறைவேற்றியுள்ளாரென்பதாகக் கருதப்படுதலாகாது.

14. இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக்கப்படாத ஏதேனும் விடயம் தொடர்பாகச் சட்டவரைஞரின் முடிவு இறுதியானதாதல் வேண்டும்.

15. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமையிருப்பின், சிங்கள அறிவித்தலே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

சட்டவரைஞர்,
சட்டவரைஞர் திணைக்களம்.

சட்டவரைஞர் திணைக்களம்,
கொழும்பு 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சட்டவரைஞர் திணைக்களத்தின் தரம் III ஆவணப்படுத்துகை உதவியாளர்களுக்கும் பதிப்பாசிரியர்களுக்குமான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2019**

(அலுவலகப் பாவனைக்கு மட்டும்)

பரீட்சார்த்தி பரீட்சைக்குத்
தோற்றும்
மொழிமூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டில் எழுதவும்)

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்):..................................
உதாரணம் (HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA,.)

1.2 கடைசிப்பெயரை முதலிலும் முன்னைய பெயரின் முதலெழுத்துக்களை அதன் பின்னரும் வருமாறு ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் பெயர்: ...........................................................................................
(உதாரணம் GUNAWARDANA H.M.S.K)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :..........................................................................

2 2.1 அலுவலகத்தின் /திணைக்களத்தின் /நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்) : ........
.........................................................................................................................................................
(அனுமதி அட்டை இம்முகவரிக்கு அஞ்சலிடப்படும்)

2.2 அலுவலகத்தின் /திணைக்களத்தின் / நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/தமிழில்) : ................................
.........................................................................................................................................................

2.3 தனிப்பட்ட முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :.............................................................................................

2.4 தொலைபேசி இல.: செல்லிடத் தொலைபேசி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

நிலையானது

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

3. தேசிய ஆள் அடையாள அட்டை இல.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

4. பால் : ஆணா/ பெண்ணா ?

ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தைக் கூட்டில் எழுதவும்)

5. இவ்வாண்டில் நீர் எப்பாடத்துக்கு /பாடங்களுக்குத் தோற்றுகின்றீரோ அப்பாடம் /பாடங்கள் :

| பாடம் | பாட இல. |
|---|---|
| | |
| | |

6. பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

7. தற்போதைய பதவி :

7.1 பதவி :......................................

7.2 நியமனக் கடிதத்தின் இலக்கம் :................................................

8. 8.1 நீர் முதற்றடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றுகின்றீரா: ...............................

8.2 நீர் முதற்றடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றாதிருப்பின், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணத்தொகை: .....................

8.3 எந்த அலுவலகத்திற்கு பரிட்சைக் கட்டணங்கள் செலுத்தப்பட்டனவோ அந்த அலுவலகம் :........................................

8.4 பற்றுச்சீட்டிலக்கம் :..........................................

8.5 திகதி: ...........................................

பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். (இயைபாகவிருப்பின் மட்டுமே).(பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றை உம்மிடம் வைத்திருப்பது பயனுள்ளதாகவிருக்கலாம்)

மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையென்றும், இவ்விண்ணப்பத்தில் என்னால் சுட்டிக்காட்டப்பட்ட மொழிமூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் உரித்துடையவராகவுள்ளேனென்றும்,..............ரூபாவான பரீட்சைக் கட்டணத்தை நான் செலுத்தியுள்ளேனென்றும், பற்றுச்சீட்டானது இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதென்றும் குறிப்பிடுகின்றேன். பரீட்சையை நடாத்துதலும் பெறுபேறுகளை வெளியிடுதலும் தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்பட்ட விதிகளுக்கு நான் உடன்படுகின்றேன்.

......................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி:..............................

திணைக்களத்தலைவரின் அல்லது திணைக்களத்தலைவரின் சார்பில் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலரின் முன்னிலையில் விண்ணப்பதாரர் தமது கையொப்பத்தை இடுதல் வேண்டும்.

கையொப்பத்தினை உறுதிப்படுத்துதல் :

திரு./திருமதி/செல்வி............................................................ என்பவர், நான் தனிப்பட்டமுறையில் அறிந்தவரும் எனது திணைக்களத்தைச் சேர்ந்தவருமான அலுவலரொருவராக உள்ளாரென்றும், அவர் என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டாரென்றும், விதித்துரைக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியதன் மீது பெறப்பட்ட பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளாரென்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

................................,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

பெயர் :.........................................

பதவிப்பெயர் :.................................

முகவரி:..........................................

திகதி:............................................

(அலுவலகமுறையான இலச்சினையை இடுவதன்மூலம் உறுதிப்படுத்தவும்)

திணைக்களத்தலைவரின் சான்றிதழ் :

1. இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட விபரங்களை நான் நுனித்தாராய்ந்தேன் என்றும்; அத்துடன்
2. சம்பந்தப்பட்ட அலுவலர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகவுடையவராக உள்ளாரென்றும்,

சான்றுப்படுத்துகின்றேன்.

..............................,
திணைக்களத்தலைவரின் கையொப்பம்
மற்றும்
அலுவலகமுறையான இலச்சினை.

பெயர் :........................................
பதவிப்பெயர் :.................................
முகவரி:..........................................
திகதி:............................................

4-230

---

**மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு**

வன பரிபாலனத் திணைக்களம்

## வன பரிபாலனத் திணைக்களத்தின் வன வெளிக்கள உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2019

வன பரிபாலனத் திணைக்களத்திலுள்ள 140 வன வெளிக்கள உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமைகளையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து 2019.05.05 ஆந் திகதிற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (2019 ஆடி மாதம் பரீட்சை நடாத்தப்படும்)

**01. சம்பளம்**

PL-2-2016 அரசாங்க பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இற்கு இணங்க

ரூபா 25,250 - 10 × 270 - 10 × 300 - 10 × 330 - 12 × 350 - ரூபா 38,450.

**02. சேவையில் இணைத்துக் கொள்வதற்கான பொதுவான நியதிகளும், நிபந்தனைகளும்**

i. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத்திட்டத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

ii. நியமனம் மூன்று வருட(03) தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும்.

iii. வன வெளிக்கள உதவியாளர் பிரிவிற்குட்பட்ட சகல காடுகளையும் பாதுகாப்பதற்காக பகுதி வன உத்தியோகத்தரினதும் வட்டார வன அதிகாரியினதும், முழுமையான மேற்பார்வையின் கீழ் வேலைத்திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல், வனக்குற்றம் தொடர்பாக அவதானமாக இருத்தல், குற்றவாளிகளை கைதுசெய்தல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளுக்கு உதவி புரிதல் போன்றன வன வெளிக்கள உதவியாளர்களின் கடமையாகும்.

iv. விசேடமாக தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் காடுகளைப் பாதுகாத்தல், வனக்குற்றம் தொடர்பாக பரிசோதனை செய்தல், வனக்குற்றவாளிகளையும், வன விளைபொருட்களையும் கைதுசெய்தல் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தல் போன்ற கடினமானதும், அவதானமானதுமான கடமைகளைகளுக்காக உயர் அதிகாரிகளுக்கு உதவி புரிய வேண்டி ஏற்படும். பெரும்பாலும் இவ் உத்தியோகத்தர்கள் அரச விடுமுறை தினங்களிலும், இரவு நேரங்களிலும் இவ்வாறான நடவடிக்கைகளில் தனிப்பட்ட ரீதியில் ஈடுபடுவதற்கும் நேரிடும். மேற்குறித்தவாறு வன வெளிக்கள

உதவியாளர்களின் கடமைகள் கடினத்தன்மையும், எச்சரிக்கை மிக்கதாகவும் உள்ள காரணத்தினால் பெண்கள் இந்நடவடிக்கைகளில் ஈடுபடுவது செயன்முறையில் சிரமமானதாக அமையலாம்.

v. வர்த்தமானி அறிவித்தலின் 2 ஆம் பந்தியில் பிரசுரிக்கப்பட்டவாறு அரச சேவையின் பதவிக்கு நியமிக்கப்படும் போது விதிக்கப்படும் பொதுவான நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.

vi. பரீட்சையானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கின்ற மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

**03. வயதெல்லை**

பதவிக்கான விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித்தினத்தில் 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதற்கிணங்க 2001.05.05 ஆந் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1974.05.05 ஆந் திகதி அல்லது அதற்கு பின்னர் பிறந்த தினத்தை எய்தியுள்ள நபர்கள் மாத்திரம் விண்ணப்பத் தகைமை பெறுவர்)

**04. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் : சகல விண்ணப்பதாரிகளும் கீழ்க் குறிப்பிடப்படும் தகைமைகளை திருப்திகரமாக பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்**

i. கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்

ii. சகல விண்ணப்பதாரிகளும் குறித்த பதவிக்கு உரித்தான உடல் ஆரோக்கியத்தையும், தொழிற்கல்வி ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்படும் தேசிய தொழிற்தகைமை திறமையில் இரண்டாம் படிநிலை(NVQ 2) தேர்ச்சியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

iii. ஆண் விண்ணப்பதாரிகளின் உயரம் 5 அடி 02 அங்குலத்திற்கு குறையாமலும் மார்பளவு 32 அங்குலத்திற்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.

iv. பெண் விண்ணப்பதாரிகள் ஆகக்குறைந்த உயரம் 05 அடியாக இருத்தல் வேண்டும்.

v. அனைத்து பரீட்சார்த்திகளும் இலங்கையின் எப்பாகத்திலும் கடமை புரிவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல், உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

vi. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருப்பதுடன் நன்னடத்தை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**05. ஆட்சேர்ப்பு முறை**

i. எழுத்து மூல பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகள் 40 வீதமாகும். அவ்வாறு சித்தியெய்திய புள்ளிகளின் முன்னுரிமை ஒழுங்குமுறையின் மீது ஆட்சேர்ப்பு செய்வதற்குள்ள எண்ணிக்கையின் இரு மடங்கு எண்ணிக்கையுடைய விண்ணப்பதாரிகள் கட்டமைப்பு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, நேர்முகப்பரீட்சையிலும் பரீட்சையிலும் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமை ஒழுங்குமுறையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்ற தினத்தில் நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்கு நேரொத்ததாக ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகள் தபால் மூலம் அல்லது www.results.exams.gov.lk இணையத்தளத்தின் ஊடாக அறிவிக்கப்படும்.

ii. மேலே 5.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆட்சேர்ப்புச் செய்யவுள்ள/ நிலவுகின்ற இறுதி வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போது சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் பலர் இருப்பின் அப்புள்ளியை விட அதிக புள்ளிகளை பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் மட்டும் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

iii. மேலே 5.1 ஆம் பந்தியின் கீழ் தகுதி பெற்று தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் 03 வருடத்திற்குள் தாவரவியல் விஞ்ஞான பரீட்சைக்கு (ஆரம்ப மட்டம்) தோற்றி சித்தியடைந்திருப்பதுடன், 03 வருட திருப்திகரமான சேவைக்காலத்தினை பூர்த்தி செய்ததன் பின்னர் சேவையில் நிரந்தரமாக்கப்படுவர்.

**06. பாடவிதானம்:-**

எழுத்துமூலப் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டது.

(i) விண்ணப்பதாரிகள் இப்பரீட்சை வினாத் தாள்கள் இரண்டிற்கும் ஒரே மொழி மூலத்தில் தோற்ற வேண்டும். சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாத்தாளிலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளை பெற்றிருத்தல் வேண்டும்.

**பாட இலக்கம்**

| | | |
|---|---|---|
| *01* | **நுண்ணறிவுப் பரீட்சை** | **காலம் : 01 - மணித்தியாலம், 100 புள்ளிகள்** |
| | | பரீட்சார்த்திகள் தர்க்க ரீதியாக ஆய்வு செய்கின்ற திறனையும், தீர்மானம் எடுக்கும் இயல்பினையும், பிரச்சினைகளை தீர்க்கின்ற வகையிலும் அமைந்த கட்டமைப்பு மற்றும் குறு வினாக்களுக்கு விடையளிக்கும் வகையிலான 50 வினாக்களைக் கொண்டுள்ளதுடன் சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |
| *02* | **தொழில்நுட்பப் பரீட்சை** | **காலம் : 02 - மணித்தியாலம், 100 புள்ளிகள்** |
| | | வன வளங்களினதும், அதன் உயிரினங்களினதும் உயிர்வாழ்க்கைக்கு பாதகமாக அமைகின்ற காரணிகள் பற்றிய அறிவு, இலங்கையின் சுற்றாடல் பற்றிய அறிவு, பூகோள முக்கியத்துவம் பற்றிய அறிவு, இலங்கையின் விவசாய மற்றும் பொருளாதாரம் பற்றிய அறிவு, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, வனபரிபாலனத் திணைக்களம் பற்றிய முக்கியமான தகவல்கள், அதன் நடவடிக்கைகள் மற்றும் நோக்கங்கள் பற்றிய அறிவு, இயற்கை சுற்றுச் சூழல், வனாந்தரங்கள், மற்றும் தாவரங்கள் பற்றிய அறிவு, வனங்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையேயான தொடர்புகளின் முக்கியத்துவம் பற்றிய அறிவு, பூகோள விஞ்ஞானம் பற்றிய அடிப்படை விடயங்கள் (புவியின் அமைப்பு, புவியின் கூறுகள் பற்றியது) மற்றும் விண்ணப்பதாரியின் பொது அறிவு பற்றிய அளவீடு |

(ii) கட்டமைப்பு நேர்முகப்பரீட்சையில் பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்-

| பரீட்சித்து புள்ளிகள் வழங்கப்படும் விடயங்கள் | அதி கூடிய புள்ளிகள் | தெரிவு செய்வதற்கு கவனிக்கப்படும் ஆகக்குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித்தகைமை | 20 | பொருத்தமற்றது. |
| 2. மேலதிக தொழிற் றகைமை | 30 | |
| 3. அனுபவம் | 20 | |
| 4. கணினி அறிவு | 10 | |
| 5. மொழித் தேர்ச்சி | 15 | |
| 6. நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கப்படும் திறமைகள் | 5 | |
| **மொத்தம்** | 100 | |

**07. விண்ணப்பங்களும், ஏனைய விபரங்களும்:**

(i) இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப விண்ணப்பப்படிவத்தின் 01 தொடக்கம் 07 (ii) வரையான தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலும் மீதி மறுபக்கத்திலும் உள்ளடங்குமாறு 21 செ.மீ x 29 செ.மீ (A4 அளவு) கடதாசியின் இரண்டு பக்கங்களிலும் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கப்பட்ட மொழிமூலத்தில் உரியவரின் கையெழுத்தினால் நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வன பரிபாலனத் திணைக்களத்தின் வன வெளிக்கள உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் திறந்த போட்டிப் பரீட்சை -2019" எனக் குறிப்பிட்டு 2019.05.05 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சை) பிரிவு, "இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல 1503, கொழும்பு" என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். (தனிப்பட்ட பெயருக்கோ அல்லது வேறேதும் முகவரிக்கோ அனுப்பப்படலாகாது) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் பிரயோசனமாதாகும்.

(ii) பூரணப்படுத்தப்படாத அல்லது தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

(iii) அஞ்சலில் தொலைந்துபோகும் விண்ணப்பப்பத்திரங்கள் தொடர்பில் பொறுப்பேற்கப்படமாட்டாது.

(iv) விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஏதேனுமொரு நிறுவனத்தினூடாக பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தமது கையொப்பத்தினை நிறுவன தலைவரினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பதாரி ஒருவர் தனது கையொப்பத்தினை அரசாங்கப் பாடசாலை ஒன்றின் தலைவரினால் ஓய்வு பெற்ற உத்தியோகத்தரால், பிரிவுக்குப் பொறுப்பான கிராம அலுவலரினால், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அங்கீகாரமளிக்கப்பட்ட அதிகாரி, அரச அல்லது மாகாண அரச சேவையிலுள்ள அல்லது நிரந்தரமாக்கப்பட்ட பதவிநிலையிலுள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது பௌத்த விகாரை ஒன்றின் விகாராதிபதி அல்லது தலைமை பௌத்த மதகுரு அல்லது ஏனைய மத ஸ்தலங்களின் பொறுப்பாகவுள்ள மதகுரு என கணிக்கக்கூடிய ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(v) இவ் அறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்டவாறல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(v) அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும் என்பதுடன் பொருத்தமானவர் என இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து இத்திணைக்களத்திலிருந்து விடுவிப்பதற்கு சம்மதம் தெரிவிக்கின்றேன் எனவும் அவர் குறிப்பிட வேண்டும்.

(vii) விண்ணப்பப்பத்திரங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

**08. பரீட்சைக் கட்டணம்**

(i) பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். இக்கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் தலைமையதிபதியின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இன் கீழான அரச வருமான கணக்கிற்கு வரவு வைக்கும் வகையில் எந்தவொரு பிரதான தபால் காரியாலயத்திலோ அல்லது உப தபால் காரியாலயத்திலோ மேற்குறித்த தொகையைச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை/றசீதை விண்ணப்பப்பத்திரத்தின் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணம் விண்ணப்பப்பத்திரங்கள் பொறுப்பேற்கும் இறுதித் தினமாகிய 2019.05.05 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். (பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் அல்லது றசீதின் நிழற்படப் பிரதியொன்றை விண்ணப்பதாரி தன்வசம் வைத்திருப்பது பொருத்தமானது)

(ii) எக்காரணங் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதுடன், வேறேதும் பரீட்சை ஒன்றுக்காக மாற்றுவதற்கும் அனுமதியளிக்கப்படமாட்டாது.

**09.** கீழ்க்குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்றை அல்லது அனைத்தையும் கோரப்படுகின்ற எச்சந்தர்ப்பத்திலும் சமர்ப்பித்தல் வேண்டும்.

i. பிறப்புச் சான்றிதழ்;

ii. கல்விச் சான்றிதழ்கள்;

iii. அண்மையில்பெற்றுக்கொள்ளப்பட்ட கிராம அலுவலரின் நற்சான்றிதழ் (பிரதேச செயலாளரின் சான்றுப்படுத்தலுடன்);

iv. வேறு நற்சான்றிதழ்கள் இரண்டு;

v. ஏனைய சான்றிதழ்கள்.

**குறிப்பு** - ஆவணங்கள் /சான்றிதழ்கள் அல்லது அதன் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பலாகாது.

**10. பரீட்சை நிலையங்களும் அனுமதி அட்டைகளும்:**

(i) பரீட்சையானது இந்த அட்டவணை I இல் காட்டப்பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படவுள்ள பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற நகரம், அதற்குரித்தான இலக்கம் விண்ணப்பத்தின் உரிய தலைப்பில் முதலாவது மற்றும் இரண்டாவது தெரிவுகளாகக் குறிப்பிடல் வேண்டும். ஏதேனும் நகரமொன்றில் பரீட்சை நிலையமொன்றை அமைப்பதற்கு விண்ணப்பதாரிகள் போதுமானளவு

விண்ணப்பிக்காதவிடத்து இந்த விண்ணப்பதாரிகள் அவர்களது இரண்டாவது விருப்பாகக் காட்டியுள்ள நகரில் அல்லது அண்மையிலுள்ள வேறு நகரில் அமைக்கப்படுகின்ற பரீட்சை நிலையத்துடன் இணைக்கப்படுவர். அத்துடன் உத்தேசித்த எல்லா நகரங்களிலும் அதிக எண்ணிக்கையில் அல்லது பரீட்சை நிலையத்தைத் தாபிப்பதற்குப் போதுமான எண்ணிக்கையில் விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காதவிடத்து, பரீட்சையை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

(ii) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான தகைமைகளைப் பெற்றவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என பூரணமான முன்னனுமானம் செய்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்கு உட்பட்ட விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் தினமான 2019.05.05 ஆந் திகதியன்று அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் உரிய கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் செம்மையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் இது பற்றிக் குறிப்பிட்டு பத்திரிகை விளம்பரங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தில் பிரசுரிக்கப்படும். விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 2 அல்லது 3 தினங்கள் கடந்த பின்னரும் தங்களது அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இது தொடர்பில் "இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு (நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சை)" பிரிவில் வினவ வேண்டும். இவ்வாறு வினவும்போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள்அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி போன்றவற்றைச் சரியாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு அப்பால் வசிப்பவராயின், இந்த விபரங்களுடன் தொலைநகல் ஊடாக பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றைத் துரிதமாக பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பதாரிகள் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தில் காட்டப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி வைக்குமாறு விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட தொலைநகல் இலக்கத்தினூடாக கோருதல் மிக்க பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு கோரும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் கோருகின்ற ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தன்னிடம் வைத்திருந்த விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பத்தை அஞ்சல் செய்யும் போது பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் ஆயத்தமாக வைத்திருத்தல் பயனுள்ளதாக இருக்கும்.

(iii) விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதி அட்டையை விநியோகித்தல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளாரென ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது என்பதுடன், பரீட்சைக்குத் தோற்றுகின்ற முதல் தினத்திலேயே தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(iv) பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகள் வெளியிடுதல் தொடர்பில், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படல் வேண்டும். இந்த ஒழுங்கு விதிகளை மீறுமிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படும் தண்டனைக்கும் உரிய நபர் ஆளாதல் வேண்டும்.

***11.*** ***விண்ணப்பதாரியின் ஆள் அடையாளம்***: பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில், தங்களது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும் என்பதுடன் இதற்காகப் பின்வரும் ஏதேனும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்:-

i. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை;

ii. செல்லுபடியான கடவுச்சீட்டு;

iii. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

***12.*** **போலியான தகவல்களை வழங்குவதற்கான தண்டனைகள்:**

தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் அல்லது தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் உரிய தகைமைகள் பூர்த்தி செய்யப்படவில்லை எனத் தெரியவருமிடத்து, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தத்தன்மை இரத்துச்செய்யப்படும் என்பதுடன், பரீட்சார்த்தி அளித்துள்ள எவையேனும் விபரங்கள் அவரது அறிவுக்கு எட்டியவரையில் பொய்யானவையென்றும் அல்லது எவையேனும் முக்கிய விபரங்களை வேண்டுமென்றே மாற்றியுள்ளாரென அவர் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து, அவர் அரசாங்க சேவையிலிருந்து பணி நீக்கத்திற்கு உட்படுவார்.

***13.*** தேவையான சந்தர்ப்பங்களில், இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பில் காடு பேணுநர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

14. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்ற இந்த அறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் சந்தர்ப்பத்தில், சிங்கள மொழியின் அறிவித்தலுக்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

காடு பேணுநர் தலைமையதிபதி

வன பரிபாலனத் திணைக்களம்,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வன பரிபாலனத் திணைக்களத்தின் வன வெளிக்கள உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2019**

**Open Competitive Examination for the Recruitment to the Post of Forest Field Assistant of the Forest Department – 2019**

பரீட்சைக்குத் தோற்றுகின்ற நகரம்:

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| முதல் தெரிவு | | |
| இரண்டாம் தெரிவு | | |

(அட்டவணை I இற்கமைய பூர்த்தி செய்யவும்)

01. பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழி எழுதுக:
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் இடுக)

02.
I. முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்):
……………………………………………………………………………………
II. முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்):
……………………………………………………………………………………

03.
I. தபால் மூலம் அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி :
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
……………………………………………………………………………………
II. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்):
……………………………………………………………………………………

04. பால் :
ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதுக)

05. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம்: | | | | | | | | | | | |

06. தொலைபேசி இல: | | | | | | | | | |

07.

I. பிறந்த திகதி:

ஆண்டு | | | | |   மாதம் | | |   திகதி | | |

II. 05.05.2019 அன்று வயது:

வருடங்கள் | | |   மாதங்கள் | | |   நாட்கள் | | |

08. பிரசாவுரிமை:

பரம்பரையாக - 1
பதிவின் மூலம் - 2

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதுக)

09. பௌதிகத் தகைமைகள்:

I. உயரம்:………………..

II. மார்பு: ………………… அங்குலம் (இது பெண் விண்ணப்பதாரர்களுக்கு பொருந்தாது)

10. கல்வித் தகைமைகள்

I. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை

1 ஆவது அமர்வு
ஆண்டு ……….. சுட்டெண் ………….

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

2 ஆவது அமர்வு
ஆண்டு ……….. சுட்டெண் ………….

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

II. தொழில்சார்/மேலதிக கல்வித் தகைமைகள்: ……………………………………………………..

11. தொழில்சார்/மேலதிகத் தகைமைகள்: ………………………………………………..

12.

I. பரீட்சைக்கட்டணம் செலுத்திய அஞ்சல் அலுவலகம்/உப அஞ்சல் அலுவலகம்: ……………………………………
……………………………………………………

II. பற்றுச் சீட்டு இலக்கமும் செலுத்தப்பட்ட திகதியும் : …………………………………..

(பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டவும்)

13.

I. தங்களுக்கு எப்போதாவது எந்தவொரு குற்றச்சாட்டுக்காகவோ நீதிமன்றத்தினால் தண்டனை வழங்கப்பட்டுள்ளதா?
ஆம்/இல்லை: ………………………

II. ஆம் எனில், விபரங்களைக் குறிப்பிடுக : ………………………..

14. தாங்கள் தற்பொழுது தொழில் புரிபவராயின், அது தொடர்பான விபரங்கள் :

(i) நிறுவனம் :……………………………… (iii) பதவி ……………………

(ii) முதல் நியமனத் திகதி:……………… (iv) சம்பளம்……………………

15. தங்களைப் பற்றிய தகவல்களை வழங்கக்கூடிய உறவினரல்லாத இருவரது பெயரையும் முகவரியையும் குறிப்பிடுக.

(a):- ……………………………………………………………………….
(b):- ……………………………………………………………………

16. விண்ணப்பதாரியின் உறுதியுரை:

இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையுமென நான் உறுதிப்படுத்துகின்றேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள விபரங்கள் ஏதும் பொய்யானவை அல்லது தவறானவையென தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து, எனது விண்ணப்பப்படிவம் இரத்து செய்யப்படுமெனவும் நியமனம் பெற்றதன் பின்னர், இவ்வாறு தெரியவருமிடத்து, எந்தவித நஷ்ட ஈடும் இல்லாமலே பணி நீக்கம் செய்யப்படுவேன் எனவும் நான் அறிவேன். மேலும் பரீட்சை நடாத்துவதும், பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதும் தொடர்பில், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகளுக்கும் நான் கட்டுப்படுவேன் எனவும் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

………………………………………
விண்ணப்பதாரியின் கையொப்பம்
திகதி : (ஒப்பத்தை உறுதிப்படுத்துபவர்
முன்னிலையில் உறுதிப்படுத்தல் வேண்டும்)

17. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி.............என்பவரை நான், தனிப்பட்ட ரீதியில் அறிவேன் எனவும், அவர் என் முன்னிலையில் 2019,......................... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் எனவும், இதன் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………
உறுதிப்படுத்துபவரின் ஒப்பம்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் :……………………..
பதவி :…………………………………………………………
முகவரி :……………………………………………………….
திகதி :………………………………………………………
(பதவி இலச்சினையை இடுக.)

18. விண்ணப்பதாரி அரசாங்க ஊழியராயின் திணைக்களத் தலைவரினால் இந்தப் பகுதி பூர்த்தி செய்தல் வேண்டும்:

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ......................................... இந்த அமைச்சில்/ திணைக்களத்தில்/ அலுவலகத்தில் ………………………… ஆக நிரந்தர/ தற்காலிக பதவியொன்றை வகிப்பவரெனவும் இவர் வழங்கியுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதெனவும் உறுதிப்படுத்துகின்றேன். இவர் இந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்படுமிடத்து, இந்தத் திணைக்களத்தில் தற்பொழுது வகிக்கின்ற பதவியிலிருந்து விடுவிக்கலாம்/ விடுவிக்கமுடியாது என இத்தால் தெரிவிக்கின்றேன்.

………………………………………
திணைக்களத்தலைவர் அல்லது அவரினால்
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :…………………………
பதவி :…………………………
(பதவி இலச்சினையை இடுக.)
திகதி :-………………………...
(தேவையற்ற வசனங்களைக் கீறிவிடுக.)

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவத்துடன் பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு/ ரசீது தவிர்ந்த வேறு ஏதும் ஆவணங்கள் அல்லது அதன் பிரதிகள் இணைக்கப்படலாகாது.

**அட்டவணை I**

பரீட்சை நிலையங்கள் தாபிக்கப்படுகின்ற நகரங்களும் நகர எண்களும்

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அநுராதபுரம் | 20 |
| பொலநறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொனராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

4-278

---

நீர்ப்பாசன, நீர்வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

## வளிமண்டலவியல் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் வளிமண்டலவியல் அவதானிப்பாளர்/தொடர்பாளர் பதவிக்கு (பயிற்றுவித்தல் தரத்துக்கு) ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019

1. வளிமண்டலவியல் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் வளிமண்டலவியல் அவதானிப்பாளர்/ தொடர்பாளர் பதவி வெற்றிடங்களுக்கு 30 பயிற்றுவித்தல் தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடாத்தப்படுகின்ற திறந்த போட்டிப் பரீட்சை 2019, யூலை மாதம் நடைபெறும் என்பதுடன் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி மே மாதம் 06 ஆந் திகதி ஆகும். தகைமை பெற்றுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற எழுத்து மூலமான பரீட்சையொன்றின் பெறுபேறுகளுக்கமைய திறமை அடிப்படையில் தகைமை பெறும் அபேட்சகர்கள் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் வளிமண்டலவியல் அவதானிப்பாளர்/தொடர்பாளராக 02 வருட பயிற்சிக் காலத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள். மேற்படி பயிற்சியை தொடர்ந்து தோற்ற வேண்டிய தகுதிகாண் பரீட்சையில் சித்தியடையும் உத்தியோகத்தர்கள் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் வளிமண்டலவியல் அவதானிப்பாளர்/ தொடர்பாளர் III ஆம் தரத்துக்கு நியமிக்கப்படுவார்கள். அப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியங்களுடன் கூடியதுமான பதவி ஆகும். 03 ஆண்டு கால நன்னடத்தை காலத்துக்கு உட்பட்டது.

3. **சேவையில் அமர்த்துவதற்கான பொது நியமங்களும் நிபந்தனைகளும் :**

3.1 நியமிக்கப்படும் ஆட்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் குறிப்பிட்ட சில வெற்றிடங்களையோ அல்லது சகல வெற்றிடங்களையோ நிரப்பாமல் இருப்பதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

3.2 அரச சேவையின் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1930/ 12 ஆம் இலக்க மற்றும் 2015.09.01 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை தொழில்நுட்ப சேவை விதிகள் கோவையில் விதிக்கப்பட்டுள்ள அல்லது இனி வருங் காலங்களில் விதிக்கப்படவுள்ள அல்லது திருத்தங்களுக்கும், தாபனக் கோவையினதும் நிதி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கும் 1589/30 ஆம் இலக்க மற்றும் 2009.09.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பகிரங்கச் சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கை முறை விதிகளுக்கும் உட்பட்டதாக தெரிவு செய்யப்படும் அபேட்சகர் ஒருவர் சேவையின் 02 ஆண்டு கால பயிற்றுவித்தல் தரத்துக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்.

3.3 தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நாட்டின் எந்த பாகத்திலும் சேவையாற்றுவதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

3.4 கடமை நேரங்கள் எப்பொழுதும் சாதாரண அலுவலக நேரங்களாக இருப்பதில்லை என்பதோடு இரவு பகல் இரு வேளைகளிலும் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரச விடுமுறை நாட்களிலும் பணியாற்ற நேரலாம். பணி ஆவணங்களுக்கமையவும் கடமையாற்ற நேரலாம்.

3.5 இரண்டு ஆண்டு கால பயிற்சியை முழுமையாக நிறைவு செய்வதாகவும், இரண்டு ஆண்டு கால பயிற்சியைத் தொடர்ந்து 05 ஆண்டுகள் திணைக்களத்தில் பணியாற்றுவதாகவும் உறுதியளித்து திணைக்களத்துடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட வேண்டுமென்பதோடு பயிற்சி ஆரம்பமான பின்னர் பயிற்சியை இடைநடுவே விட்டுச் சென்றாலோ அல்லது உடன்படிக்கைக்கமைய உரிய காலத்துக்கு திணைக்களத்தில் பணியாற்ற தவறினாலோ பயிற்சிகளுக்காக அரசாங்கம் செலவிட்ட தொகையும், ரூபா 250,000.00 செல்லுபடியாகும் தொகையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு செலுத்துவதாகவும் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்படுகின்ற இரண்டு பிணையாளர்களின் உத்தரவாதத்துடன் பிணைப் பத்திரமொன்றை பயிற்சி ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாக எழுதி கையொப்பமிடல் வேண்டும்.

3.6. அரசகரும மொழி அல்லாத மொழியொன்றில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் நன்னடத்தை காலத்தில் அரசகரும மொழிகள் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். உரிய காலத்தில் மேற்படிப் பரீட்சையில் சித்தி பெற தவறுகின்றமை அடுத்த சம்பள ஏற்றம் நிறுத்தி வைக்கப்படுவதற்கு காரணமாக அமையலாம்.

3.7 நிரந்தர நியமனத் திகதியிலிருந்து 05 வருடங்களுக்குள் 1/ 2014 ஆம் இலக்க பொது நிருவாக சுற்று நிருபத்தில் குறிப்பிட்டுள்ளவாறு தமது பதவிக்கு ஏற்புடையதாகும் மட்டத்திலான இரண்டாம் அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெறுதல் வேண்டும். ஏற்புடைய காலத்தில் மேற்படி தேர்ச்சியை பெற தவறும் பட்சத்தில் மேற்படி தேர்ச்சியைப் பெறும் வரைக்கும் சம்பள ஏற்றங்கள் நிறுத்தப்படும்.

3.8 இணைப்பு மொழியான ஆங்கிலம் தொடர்பான க.பொ.த.(சா.த.) மட்டத்திலான தேர்ச்சியினை III ஆம் தரத்தில் 05 வருடங்களுக்கு முன்னதாக பெற்றிருத்தல் வேண்டும்.

4. **சம்பள அளவுத்திட்டம் :**

4.1 இரண்டு ஆண்டு கால பயிற்சிக் காலத்தில் பயிற்சி பெறும் தரத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் வளிமண்டலவியல் அவதானிப்பாளர் தொடர்பாளர் பதவிக்கு 03/ 2016 ஆம் இலக்க 2016.02.25 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றுநிருபத்தின் ஏ அட்டவணையின் பிரகாரம் மாதாந்தக் கொடுப்பனவுகள் மற்றும் சீராக்கல் கொடுப்பனவுகள் பின்வருமாறு செலுத்தப்படும்.

**அட்டவணை I**

| பதவி | மாதாந்தக் கொடுப்பனவு | | |
|---|---|---|---|
| | 2018.01.01 ஆந் திகதி முதல் (ரூபா) | 2019.01.01ஆந் திகதி முதல் (ரூபா) | 2020.01.01 ஆந் திகதி முதல் (ரூபா) |
| தொழில்நுட்ப சேவையின் 1 ஆண்டு | 21,532.00 | 24,336.00 | 27,140.00 |
| 2 ஆண்டு | 21,770.00 | 24,605.00 | 27,440.00 |

**அட்டவணை II**

| பதவி | மாதாந்தக் கொடுப்பனவு | | |
|---|---|---|---|
| | 2018.01.01 ஆந் திகதி முதல் (ரூபா) | 2019.01.01ஆந் திகதி முதல் (ரூபா) | 2020.01.01 ஆந் திகதி முதல் (ரூபா) |
| தொழில்நுட்ப சேவையின் 1 ஆண்டு | 4,306.00 | 1,502.00 | - |
| 2 ஆண்டு | 4,235.00 | 1,400.00 | - |

2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் வளிமண்டலவியல் அவதானிப்பாளர்/ தொடர்பாளர் III, II மற்றும் I ஆம் தரங்களுக்கேற்புடைய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூபா 31,040 - 10 × 445 - 11 × 660 - 10 ×730 -10 ×750 - ரூபா 57,550 (MN3 - 2016) ஆகும்.

5. **தகைமைகள்** - இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் வளிமண்டலவியல் அவதானிப்பாளர்/தொடர்பாளர் பயிற்றுவிப்பு தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு பின்வரும் தகைமைகள் ஏற்புடையதாகும்.

5.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

5.2 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 30 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். (இதற்கமைய 2001.05.06 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1989.05.06 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு பின்னரான திகதியில் பிறந்தவர்கள் மாத்திரம் இதற்கு விண்ணப்பிப்பதற்கான தகைமையைக் கொண்டுள்ளனர்.)

5.3 நற்பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

5.4 சகல அபேட்சகரும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும் போதுமானளவு உடற்தகுதியையும் மனத் தகுதியையும் கொண்டிருத்தல் வேண்டும்.

5.5 கீழ்க் குறிப்பிடப்படும் கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்:

(அ) சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலுமொரு பாடத்துக்கு திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் க.பொ.த. (சாதாரணத் தரம்) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

(ஆ) க.பொ.த. (உயர் தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்;

பாட அமைப்பு பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

(1) பௌதீகவியல், தூய கணிதம் மற்றும் பிரயோகக் கணிதம்.

(2) பௌதீகவியலுடன்

(i) தூய கணிதம்/பிரயோகக் கணிதம்/இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் ஒன்றிலும்;

(ii) இரசாயனவியல்/விவசாயவியல்/தகவல் தொழில்நுட்பம்/கணினி அறிவியல் ஆகிய பாடங்களில் ஒன்றிலும்

**குறிப்பு**.- சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்கு ஏற்புடைய தகைமைகளை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்றோ அதற்கு முன்னதாகவோ பூர்த்தி செய்திருக்க வேண்டியதுடன் கட்டாயமாகும்.

6. **பரீட்சை நடவடிக்கை முறை**.-

6.1 இப்பரீட்சை சிங்களம்/ தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறும். விண்ணப்பதாரி ஒருவர் தமக்கு ஏற்புடைய ஏதேனுமொரு மொழியை தெரிவு செய்ய வேண்டுமென்பதோடு பரீட்சைக்குரிய சகல வினாத்தாள்களுக்கும்

அம் மொழியிலேயே விடை அளித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சை இரண்டு வினாத்தாள்களை கொண்டிருக்கும்.

| | புள்ளிகள் | காலம் |
|---|---|---|
| உளச்சார்பு தேர்வு | 100 | 01 மணித்தியாலம் |
| பாடத்துடன் இணைந்ததொழில்நுட்பவியல் | 100 | 02 மணித்தியாலம் |

6.2 வினாத்தாள் பாடவிதானம்

I. *உளச்சார்பு தேர்வு:*

இவ்வினாத்தாள் பரீட்சார்த்தியின் சிந்தனை ஆற்றலையும் அவருடைய பகுப்பாய்வு நிலைமையையும், தீர்மானங்கள் எடுக்கும் திறனையும் தீர்மானிப்பதற்கான பல்தேர்வு வினாக்கள் மற்றும் சுருக்க பதில் அளிக்கும் வகையிலான 50 வினாக்களை கொண்டுள்ளதோடு சகல வினாக்களுக்கும் பதில் அளித்தல் வேண்டும்.

II. *பாடத்துடன் இணைந்த தொழில்நுட்பவியல் சார்ந்த வினாத்தாள் :*
பௌதீகவியல் பாடம் சார்ந்த க.பொ.த. (உ.த.) பரீட்சை மட்டம் மற்றும் அது வரையான இயந்திரவியல், அலகுகளும் அளவீடுகளும் பதார்த்தத்தின் இயல்பு, அதிர்வு மற்றும் அலை, வெப்பமும் மின்சாரமும் ஆகிய பாட அறிவினை தீர்மானிக்கின்ற வினாக்களைக் கொண்டது என்பதோடு சகல வினாக்களுக்கும் விடை அளித்தல் வேண்டும்.

6.3 நியமனம் பெறுவதற்கு தகைமை பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்துக்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்த பட்சம் நாற்பது வீத (40%) புள்ளிகளையாவது அபேட்சகர்கள் பெற வெண்டுமென்பதோடு போட்டிப் பரீட்சைக்கு ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்பும் வகையில் பெறுபேறுகளின் திறன் வரிசைக்கிரமப்படி ஆட்சேர்ப்புச் செய்யப்படும். (நேர்முகப் பரீட்சையில் அடிப்படைத் தகைமைகளை உறுதிப்படுத்த தவறும் விண்ணப்பதாரிகள் பரீட்சையில் உரிய திறன் மட்டத்தை பெற்றிருந்தாலும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட மாட்டார்கள்).

6.4 பரீட்சைப் பெறுபேறுகள் :- விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் மூலமாகவோ அல்லது www.results.exams.gov.lk இணையத்தளத்தின் மூலமாகவோ அறிவிக்கப்படும்.

7. போலித் தகவல்களுக்கான தண்டனைகள்.- விண்ணப்பத்தை பூர்த்தி செய்கையில் மிகக் கவனமாக சரியான தகவல்களை மாத்திரம் வழங்க வேண்டும். இப்பரீட்சையின் விதிகளின் பிரகாரம் யாதேனுமொரு அபேட்சகர் தகைமையற்றவரென வெளிக்கொணரப்படும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னதாகவோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சைக்கு பின்னரோ அல்லது எந்தவொரு சந்தர்பபத்திலும் குறித்த நபருடைய பரீட்சார்த்தி நிலையை இரத்துச் செய்ய முடியும்.

8. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 750.00 ஆகும். அக்கட்டணத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இன் கீழ் அரச வருமானத்துக்கு வரவு வைக்கும் வகையில் நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு தபால் அலுவலகம்/ உப தபால் அலுவலகத்துக்கு பண வடிவில் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயருக்கு பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டை அதன் ஒரு முனையின் மூலம் விண்ணப்பத்தின் உரிய இடத்தில் கழறாதவாறு நன்றாக ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்துக்கு பணக் கட்டளைகளோ முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதோடு பரீட்சைக்கு செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணங் கொண்டும் மீள் அளிக்கவோ அல்லது பிறிதொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்பிரதியொன்றை தம் வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாக இருக்கும்.

9. **விண்ணப்பங்கள்:-**

9.1 விண்ணப்பங்கள் தாம் பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழியிலேயே தயாரிக்கப்படல் வேண்டும்.

9.2 சிங்களத்திலும் தமிழிலும் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்களில் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் அம் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

9.3 இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய 21 × 29 செ. மீ. (ஏ4) அளவு கடதாசிகளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பம் தயாரிக்கப்படுதல் வேண்டும். இல 01 தொடக்கம் 04(உ) வரையான விடயங்கள் 01 ஆம் பக்கத்திலும் 05 ஆம் இலக்கம் தொடக்கம் 09.3 வரையான விடயங்கள் 02 பக்கத்திலும் 10 தொடக்கம் 15 வரையான விடயங்கள் 03 பக்கத்திலும் 16 தொடக்கம் 17.3 வரையான விடயங்கள் 04 ஆம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் விண்ணப்பம் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

9.4 விண்ணப்பதாரி தமது சொந்தக் கையெழுத்துக்களால் விண்ணப்பத்தை பூர்த்தி செய்தல் வேண்டும்.

9.5 பரீட்சைக்கு தோற்றும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது என்பதால் பிழையின்றி சீராக பூர்த்தி செய்தல் வேண்டும்.

**முக்கிய குறிப்பு:-**
பரீட்சை நிலையங்களை பின்னர் மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. ஆனாலும் யாதேனுமொரு பரீட்சை நிலையத்துக்கு போதுமானளவு பரீட்சார்த்திகள் விண்ணப்பித்திராத சந்தர்ப்பங்களில் அந்நிலையத்தை இரத்துச் செய்து குறித்த பரீட்சார்த்திகள் அண்மித்த பரீட்சை நிலையத்துக்கு ஆற்றுப்படுத்தப்படுவார்கள். மேலும் உத்தேச நகரங்கள் அனைத்திலுமோ அல்லது அதிக எண்ணிக்கையிலோ பரீட்சை நிலையங்களை நிறுவுவதற்கு போதுமானளவு பரீட்சார்த்திகள் விண்ணப்பித்திராத பட்சத்தில் பரீட்சையினை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் நடவடிக்கை எடுப்பார்.

9.6

(i) உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமைய தயாரிக்கப்படாத, உரிய தினத்துக்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத மற்றும் சீராக பூர்த்தி செய்யப்படாத முழுமையற்ற நிலையிலுள்ள விண்ணப்பங்கள் எவ்வித அறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யத் தவறுவதால் ஏற்படும் இழப்பினை விண்ணப்பதாரியே ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றை வைத்திருப்பது பயன்மிக்கதாக இருக்கும் பூர்த்தி செய்யும் விண்ணப்பம் பரீட்சையுடன் தொடர்புடைய அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதை விண்ணப்பதாரி சரி பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். இன்றேல் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

(ii) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முதலெழுத்துக்களுடன் கூடிய பெயருக்கு மாத்திரம் நியமனக் கடிதங்கள் வழங்கப்படுமென்பதால், மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியை பின்பற்றி தன்னுடைய பெயரை பிழையின்றி சீராக குறிப்பிடுதல் வேண்டும். நியமனங்கள் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் பெயரில் திருத்தம் செய்வதற்கோ புதிதாக ஒரு பகுதியை சேர்ப்பதற்கோ/நீக்குவதற்கோ அனுமதி அளிக்கப்படமாட்டாது.

9.7 வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் பேரில் உரிய தினத்தன்றோ அல்லது அதற்கு முன்னதாக விண்ணப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை விநியோகிப்பதானது விண்ணப்பதாரி இப் பதவிக்கு தகைமை பெற்றுள்ளார் என்பதற்கான அங்கீகாரமாக கருதப்பட மாட்டாது. விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தகைமைகள் உள்ளனவா என பரிசோதிக்கும் போது தேவையான தகைமைகள் இல்லை என்பது கண்டறியப்பட்டால் அந்நபரின் பரீட்சார்த்த நிலை இரத்துச் செய்யப்படும்.

9.8 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக அறிவிக்கப்பட மாட்டாது. தபாலின் போது காணாமல் போகும் விண்ணப்பங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் எவ்வித முறைப்பாடுகளும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

9.9 விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மூலையில் "தொழில்நுட்பச் சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - வளிமண்டலவியல் திணைக்களம்" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

9.10 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் 2019.05.06 ஆந் திகதியன்றோ அதற்கு முன்னதாகவோ கீழ்க்கண்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,
த. பெ. இல. : 1503,
கொழும்பு.

9.11 இன்றளவில் அரச சேவையிலோ அல்லது மாகாண அரச சேவையிலோ பணியாற்றுகின்ற விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்கள பிரதானி மூலமும், அரசக் கூட்டுத்தாபனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், போன்றவற்றில் சேவையாற்றுகின்றவர்கள் தமது நிறுவன தலைமை நிருவாகிகள் மூலமும் உரிய தினத்தன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ அனுப்புதல் வேண்டும்.

**10. பரீட்சைக்குத் தோற்றுதல்:**

10.1 விண்ணப்பதாரிகளுக்குபரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் அதனைக்குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்கள் கடந்துவிட்ட நிலையிலும் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கவில்லை எனில், பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அதனை பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவித்தல் வேண்டும். அதன்போது உங்கள் வசமுள்ள விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பத்தை பதிவுத் தபாலில் அனுப்பியதற்கான ரசீதும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியையும் குறிப்பிட்டு பரீட்சைகள் திணைக்களத்திடம் வினவ முடியுமென்பதோடு கொழும்புக்கு வெளியே உள்ள விண்ணப்பதாரி எனில், தொலைநகல் மூலம் அனுமதி அட்டையின் பிரதியொன்றை பெற்றுக் கொள்வதற்கு உங்களின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு உங்களுடைய விபரங்கள் அடங்கிய கோரிக்கை கடிதமொன்றை அறிவித்தலில் உள்ள தொலைநகல் இலக்கத்துக்கு அனுப்பி வினவுவது பயன்மிக்கதாக இருக்கும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதிகளை தம் வசம் வைத்திருத்தல் பயன்மிக்கதாக இருக்கும்.

10.2 பரீட்சார்த்திக்கு பரீட்சை வினாத்தாள் விநியோகிக்கும்போது அவர் தேர்வுக்கு அல்லது பதவிக்கு தகுதி உடையவர் என கருதப்படலாகாது.

10.3 விண்ணப்பத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். யாதேனுமொரு நிறுவனத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி ஒருவர் தமது கையொப்பத்தை நிறுவன தலைமை நிருவாகியினாலோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினாலோ அவ்வாறில்லாத விண்ணப்பதாரி தமது கையொப்பத்தினை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/ ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், தாம் வசிக்கும் பிரிவுக்கான கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் பதவி நிலை உத்தியோகத்தர் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர் அல்லது நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி அல்லது தலைமை பிக்கு அல்லது பிற சமய ஸ்தலமொன்றுக்கு பொறுப்பான சமயத் தலைலவர்களில் குறிப்பிடத்தக்க நிலையில் இருக்கும் ஒருவர் மூலமாகவோ அத்தாட்சிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். தமக்குரிய பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்கு தோற்ற வேண்டுமென்பதோடு, அவ்வாறு தோற்றும் முதலாவது சந்தர்ப்பத்திலே பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி அளிக்கப்பட மாட்டாது.

11. பரீட்சார்த்திகளின் ஆள்அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் ஆவணங்களின் ஒன்றைப் பரீட்சைகள் மண்டப மேற்பார்வையாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்:-

(i) தேசிய ஆள்அடையாளஅட்டை;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(iii) சாரதி அனுமதிப்பத்திரம்.

12. பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற ஒழுங்கு விதிகளுக்கும் பரீட்சார்த்திகள் உட்படுவார்கள். இவ்விதிகளை மீறுவார்களானால், பரீட்சைகள் ஆணையாளரினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

13. இங்கு குறிப்பிடப்படாத யாதேனுமொரு விடயம் இருப்பின், அது தொடர்பாக வளிமண்டலவியல் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். சகல விண்ணப்பதாரிகளும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுப் பரீட்சை விதிகளின் பிரகாரம் செயற்படும் கடப்பாடு உடையோர் ஆவர்.

14. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலில் மொழிப் பிரயோகங்களில் ஏதேனுமொரு பொருத்தமின்மை அல்லது ஒவ்வாமை இருப்பதாக அறியப்படும் பட்சத்தில், அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏ. கே. கருணாநாயக,
பணிப்பாளர் நாயகம்,
வளிமண்டலவியல் திணைக்களம்.

வளிமண்டலவியல் திணைக்களம்,
பௌத்தாலோக்க மாவத்தை,
கொழும்பு 07,
2019.03.29.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை தொழில்நுட்ப சேவையில் வளிமண்டலவியல் அவதானிப்பாளர்/தொடர்பாடல் (பயிற்சி தரம்) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -(2019)**

**OPEN COMPETITIVE EXAMINATION FOR THE RECRUITMENT TO THE POST OF METEOROLOGICAL OBSERVERS/COMMUNICATORS TO THE (TRAINING GRADE) OF THE SRI LANKA TECHNOLOGICAL SERVICE OF THE DEPARTMENT OF METEOROLOGY - (2019)**

* பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்
சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
ஆங்கிலம் - 4
(கூட்டினுள் உரிய இலக்கத்தைக் குறிப்பிடவும்)

1. (அ) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்): ....................................................................................................................
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ஆ) இறுதிப் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியாகவும் அமையும் விதத்தில் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ....................................................................................................................
(உதாரணம் : GUNAWARDHANA, H.M.S.K)

(இ) முழுப் பெயர் : (சிங்களம்/தமிழில்):........................................

2. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

3. பால் நிலை : ஆண் - 0 ☐
பெண் - 1
(கூட்டினுள் உரிய இலக்கத்தைக் குறிப்பிடவும்)

4. நிரந்தர முகவரி: (அ) (சிங்களம்/தமிழ்) ....................................

(ஆ) ஆங்கிலத்தில் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : (இந்த முகவரிக்கு அனுமதி அட்டை தபால் செய்யப்படும்).

(இ) நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் : ...............................

(ஈ) பிரதேச செயலகப் பிரிவு :..................................

(உ) உமது தொலைபேசி இலக்கம் நிலையான : ☐☐☐☐☐☐☐☐☐☐

கையடக்க : ☐☐☐☐☐☐☐☐☐☐

5. (அ) பிறந்த திகதி :
ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

(ஆ) 2019.05.06 ஆந் திகதியன்று வயது :
வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

6. குடியியல் நிலை : திருமணமானவரா?/திருமணமாகாதவரா?
திருமணமானவர் - 1 ☐
திருமணமாகாதவர் - 2
(கூட்டினுள் உரிய இலக்கத்தைக் குறிப்பிடவும்)

7. இனம் :
சிங்களம் -1, தமிழ் -2, ஏனையவை -3 ☐
(கூட்டினுள் உரிய இலக்கத்தைக் குறிப்பிடவும்)

8. கல்வித் தகைமைகள் :

(அ) க.பொ.த. (சா.த.) பரீட்சை

முதலாம் அமர்வு :

ஆண்டு :......................

சுட்டெண் : .............

| இலக்கம் | பாடம் | பெறுபேறு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

இரண்டாம் அமர்வு :

ஆண்டு :..................

சுட்டெண் : .........

| இலக்கம் | பாடம் | பெறுபேறு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

(ஆ) க.பொ.த. (உயர் த.) பரீட்சை

ஆண்டு :......................

சுட்டெண் : .............

| இலக்கம் | பாடம் | பெறுபேறு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

9. தொழிற் தகைமை /தொழில்நுட்ப ரீதியான தகைமை :

9.1 பெற்றுள்ள பட்டம்/டிப்ளோமா: ..........................................................................................................

9.2 குறித்த பட்டம்/டிப்ளோமாவை வழங்கிய நிறுவனத்தின் பெயர் : .......................................................................

9.3 குறித்த பட்டம்/டிப்ளோமா செல்லுபடியாகும் காலப்பகுதி : ..........................................................................

10. ஏனைய தகைமைகள் :

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

11. நீர் யாதேனும் தவறுக்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டு அல்லது தற்போது உமக்கு எதிராக ஏதேனும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதா? ஆம்/இல்லை

11.1 ஆமெனில், விபரங்களைக் குறிப்பிடுக.

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

12. விண்ணப்பதாரர் தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் தொழில் புரிபவரெனில், பதவிப் பெயர், சேவையாற்றும் திணைக்களத்தின் பெயர் மற்றும் முகவரியைக் குறிப்பிடுக.

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

13. விண்ணப்பதாரர் இதற்கு முன்னர் அரசாங்க/மாகாண அரசாங்க சேவையிலிருந்து விலகியவராயின், இதற்கான காரணம் :

.............................................................................................................................................................................

.............................................................................................................................................................................

14. பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் பற்றிய விபரம் :......

14.1 பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால்/உப தபால் அலுவலகம் : ...........................

14.2 பற்றுச்சீட்டு இலக்கம் : .................

14.3 பணம் செலுத்தப்பட்ட திகதி : ................

| |
|---|
| பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு ஒட்டவும்.<br>பற்றுச்சீட்டின் பிரதியை தம்வசம் வைத்திருக்கவும். |

15. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

(ஆ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மைக்குப் புறம்பானவை எனஉறுதிப்படுத்தப்படும் பட்சத்தில், இப்பதவிக்கு நான் தகுதியற்றவனாவேன் என்பதையும், நியமனம் கிடைக்கப்பெற்றதன்பின்னர் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

(இ) ரூ. ............ செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு உரிய இடத்தில் ஒட்டப்பட்டுள்ளது.

(ஈ) மேலும், பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டத் திட்டங்களுக்கு நான் கட்டுப்படுவேன் என்பதையும் தெரிவிக்கின்றேன்.

(உ) மேற்குறிப்பிடப்பட்ட எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றமாட்டேன்.

............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : .............................

16. விண்ணப்பதாரியில் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்

விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ........................ என்பவரை நான் தனிப்பட்ட விதத்தில் அறிவேன் என்பதையும், அவர் ..... ஆந் திகதி என் முன்னிலையில் மேலே பிரிவு 15 இன் கீழ் தனது கையொப்பத்தை இட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன். அவர் குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி, அதற்குரிய பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

..........................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி : .......................

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
பதவி : ......................
முகவரி : ...........
(உத்தியோகபூர்வ முத்திரை)

17. திணைக்களத் தலைவரின் சான்றுரை (அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

17.1 மேற்குறிப்பிடப்பட்ட திரு./திருமதி/செல்வி ...........................என்பவர் .................அலுவலகத்தில் பணியாற்றுவதாகவும் அவர் .......... ஆந் திகதி முதல் ................. பதவியில் பணியாற்றுவதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

*17.2* உத்தியோகத்தரின் பிரத்தியேக ஆவணக்கோவையின் பிரகாரம், விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் திகதிக்கு கிட்டிய ஐந்து வருட காலப்பகுதிக்குள் அவரது சேவை, நடத்தை, வருகை திருப்திகரமானது/திருப்திகரமற்றது, சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளார்/பெறவில்லை, எந்தவிதமான ஒழுக்காற்று தண்டனைக்கும் உட்படவில்லை/ உட்பட்டுள்ளார்.

(ஒழுக்காற்று தண்டனைக்கு உட்பட்டுள்ளாரெனில், விபரங்களைக் குறிப்பிடுக.)

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

*17.3* அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்கப்படுவர்/விடுவிக்கப்படமாட்டார்.

................................

திணைக்களத் தலைவரது கையொப்பம்.

உத்தியோகபூர்வ முத்திரை.

திகதி : ............

*4-442*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2019**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஏப்பிறல்** | .. | வெள்ளி | 05.04.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.03.2019 |
| | | வெள்ளி | 12.04.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.03.2019 |
| | | வியாழன் | 18.04.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.04.2019 |
| | | வெள்ளி | 26.04.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.04.2019 |
| **மே** | .. | வெள்ளி | 03.05.2019 | .. | நண்பகல் 12 | வியாழன் | 18.04.2019 |
| | | வெள்ளி | 10.05.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.04.2019 |
| | | வெள்ளி | 17.05.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.05.2019 |
| | | வெள்ளி | 24.05.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.05.2019 |
| | | வெள்ளி | 31.05.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.05.2019 |
| **யூன்** | .. | வெள்ளி | 07.06.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.05.2019 |
| | | வெள்ளி | 14.06.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.05.2019 |
| | | வெள்ளி | 21.06.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.06.2019 |
| | | வெள்ளி | 28.06.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.06.2019 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.